1967 ஜூன் 24]

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இவ்வினாவிற்கு முன்னால், மாண்புமிகு நண்பர் திரு. ஜேம்ஸ் கேட்ட வினா நம்முடைய பேரவை நடவடிக்கைக் குறிப்பிலிருந்து அகற்றப்படும். நடவடிக்கைக் குறிப்பிலும் செய்தித்தாள்களிலும் வெளிவராது என்று 235-வது விதிப்படி அறிவிக்கிறேன்.

பஞ்சாயத்து யூனியன் வேலைகளில் கழிவு நீர் திட்டம்

*72 வினா—**திரு. வை. சுவாமிநாதன் :** மதிப்பிற்குரிய தல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா— முற். பகல். 10 00

கிராம அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் பஞ்சாயத்து யூனியன்களால் நிறைவேற்றப்பட்டு வரும் சாலே போடுதல், குடிநீர் வசதி செய்தல், பள்ளிக் கட்டடம் கட்டுதல் ஆகிய வேலைகளுடன் கழிவு நீர் திட்டமும் சேர்த்துக்கொள்ள உத்தேசம் உண்டா?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** இல்லை.

**திரு. வை. சுவாமிநாதன் :** கிராம அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் மேல் மட்ட நீர்த்தேக்கத் தொட்டிக்காக ஒதுக்கப்படும் தொகை வீதிகளுக்குப் பைப் லைன் விஸ்தரிப்பதற்கும் செலவிடப்படுமா?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிக்கும், அதையொட்டி அந்தப் பகுதியிலுள்ள வீதிகளுக்கு தண்ணீர்க் கிடைக்கக்கூடிய வசதிக்கும் சேர்ந்து இணைக்கப்பட்ட திட்டமாகத்தான் இது செயல்படுத்தப்படுகிறது. ஆகவே அது பற்றிய பிரச்சினைக்கு இடமில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இத்துடன் வினாக்கள்-விடைகள் முடிவடைந்தன.

[குறிப்பு.—ஒரு உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பட்டிருந்தால், உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

(திரு. பி. ஜி. கருத்திருமன் எழுந்தார்.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் ஒரு நடைமுறைக் கேள்வியை எழுப்ப விரும்புகிறார் என்று நினைக்கிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** கனம் சபாநாயகர் அவர்களே, ஒழுங்குப் பிரச்சினையொன்றும் நான் எழுப்பவில்லை. கனம் சபாநாயகருக்கு ஒரு வேண்டுகோள். மானியக் கோரிக்கைகளின் மீது வெட்டுப் பிரேரணைகள் கொடுப்பதற்குக் குறிப்பிட்ட தேதி தீர்ந்து விட்டது என்று நான் நினைக்கிறேன். இருந்தாலும், சட்ட மன்றத்திற்குப் புதிதாக வந்திருக்கக்கூடிய உறுப்பினர்கள் சிலருக்கு நடைமுறைகளெல்லாம் தெரியாத காரணத்தால், வெட்டுப் பிரேரணைகள் கொடுப்பதற்கான கால வரம்பை இன்னும் இரண்டொரு நாள் தள்ளி வைத்தால் நன்றாக இருக்கும் என்கிற என்னுடைய வேண்டுகோளை விடுக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அருள்கூர்ந்து பேரவையிலே இனிமேல் வேண்டுகோள் விடாமல் இருக்கும்படியாகக் கேட்டுக்

கொள்ளுகின்றேன். மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் எழுப்பியதைக் குறித்து, அவை முன்னவரையும் கலந்து 12 மணி அளவில் தெரிவிக்கின்றேன்.

## 2. ஒத்திவைப்புத் தீர்மானம்.

### மதுரை எர்ஸ்கின் மருத்துவமனையில் அடிக்கடி மின்விளக்குகள் அணைதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** ஒரு ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு அனுமதி கோரி மாண்புமிகு உறுப்பினர் திரு. கரு. சீமைச்சாமி அவர்கள் கடிதம் எழுதியுள்ளார்கள். அனுமதி கோருகின்ற அந்தக் கடிதத்தை அவர்கள் இப்பொழுது படிப்பார்கள்.

* **திரு. கரு. சீமைச்சாமி :** தலைவர் அவர்களே, தமிழகச் சட்டப் பேரவை விதிகளின் 42-வது விதியின் கீழ் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த கீழ்க்கண்ட பொருள்பற்றி விவாதிக்க சபையின் நடவடிக்கைகளை ஒத்திவைக்க வேண்டுமென்று ஒரு தீர்மானத்தை நான் கொடுத்திருக்கிறேன் :

"மதுரை எர்ஸ்கின் அரசாங்க பெரிய மருத்துவ மனையில் அடிக்கடி மின் விளக்குகள் அணைந்து விடுவதால், மருத்துவர்கள் செய்து கொண்டிருக்கும் ஆபத்தான அறுவை சிகிச்சைகளைத் திடீர் என நிறுத்தி மீண்டும் டார்ச் விளக்குகள் உதவியுடன் சிகிச்சையைச் செய்ய வேண்டியிருக்கின்ற நிலைமை பற்றி விவாதிக்க"

இந்த அவையின் நடவடிக்கைகளை ஒத்திவைத்து மேற்கண்ட பொருளைப்பற்றி விவாதிக்க அனுமதிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** உறுப்பினர் அவர்கள், மின்சார விளக்குகள் அணைவதைக் குறித்து, இந்த வரவு-செலவுத் திட்டப் பொது விவாதத்தின்போதும், மருத்துவத் துறைநிதிக் கோரிக்கையின் மீது 6—7—1967 அன்றும், நிதி ஒதுக்கீடு மசோதாமீது 15—7—1967 மன்றும் பேசுவதற்கு வாய்ப்பு இருக்கிற காரணத்தால், இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு அனுமதி மறுக்கப்படுகிறது என்று நான் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

## 3. கவன ஈர்ப்பு—நூல் விலை ஏற்றமும் கைத்தறித் தொழில் நிலையும்

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அடுத்து, திரு. எல். ஆறுமுகம் அவர்கள், சட்டப் பேரவையின் 41-வது விதியின் கீழ் உடனடி பொது முக்கியம் வாய்ந்த காரியம் ஒன்றை மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருவார்கள்.